# பழனி மாநாடு: ஆன்மீக வரலாற்றில் மிகச்சிறந்த இடத்தைப் பெறும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

கேட்டேன். அதில் அவர் குறிப்பிட்டிருந்த பணிகளில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

✶ பழனி, திருத்தணி, திருச்செந்தூர், மருதமலை, குமாரவயலூர், சிறுவாபுரி, காந்தல் ஆகிய ஏழு முருகன் திருக்கோயில் களில் பெருந்திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

✶ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகிற பக்தர்கள் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருப்பதால், பக்தர்கள் நலனை மனதில் வைத்து, கோயில் வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக 58.77 ஏக்கர் நிலங்களை 58 கோடியே 54 இலட்ச ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கி கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

✶ அறுபடை வீடு முருகன் திருக்கோயில்களில் 789 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 251 பணிகள் நடைபெற்று வருகிறது.

✶ அறுபடை வீடு அல்லாத முருகன் திருக்கோயில்களில் 277 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 588 பணிகள் நடைபெற்று வருகிறது.

✶ 69 முருகன் திருக்கோயில்களின் திருப்பணிகளை முடித்து குடமுழுக்கு விழா நடத்தப்பட்டிருக்கிறது.

✶ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் நடத்து கின்ற கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற 4000 மாணவ, மாணவிகளுக்கு கட்டணமில்லாத காலைச் சிற்றுண்டி வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மதிய உணவும் வழங்கப்பட இருக்கிறது.

✶ பழனி திருக்கோயிலுக்கு தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரம் திருவிழாக் களுக்கு பாதயாத்திரை வருகின்ற பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

✶ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, துறை நிலையிலான ஓய்வூதியம் வாங்குகிற 258 ஓய்வூதிய தாரர்களுக்கு நபர் ஒருவருக்கு ஓய்வூதியம் 3000 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்ததை 4000 ரூபாயாக உயர்த்தியும், 54 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நபர் ஒருவருக்கு 1500 ரூபாய் வழங்கப்பட்டதை 2000 ரூபாயாக உயர்த்தியும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

★2024 ஆம் ஆண்டு அறுபடை வீடு ஆன்மீகச் சுற்றுப்பயணத்துக்கு 1000 பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இதுநாள் வரை 813 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

★ அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கு கட்டணமில்லாத முடி காணிக்கை செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், முடி காணிக்கை பணியாளர்களுக்கு மாதம் 5000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

★ தவில், நாதஸ்வரக் கல்லூரி, அர்ச்சகர் மற்றும் வேத ஆகமப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகையாக 3000 ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை 24.11.2023 முதல் 4000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

நம்பிக்கைக்கும் நன்மை செய்து தரக்கூடிய அரசாகவும் செயல்பட்டு வருகிறது.

'திராவிட மாடல்' என்பது எல்லார்க்கும் எல்லாம் என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து சமூக வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி என்று விளக்கிக்கொண்டு வருகிறோம். அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறையையும்



**செயல்பாபு என்று என்னால் அழைக்கப்படும் சேகர்பாபு அவர்கள், அறநிலையத் துறை அமைச்சராக வந்த பிறகு, இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது! "கோயிலை கவனித்துக் கொள்ளுங்கள்" என்று நான் அறநிலையத் துறையை அவரிடம் கொடுத்தேன். ஆனால், கோயிலிலேயே குடியிருக்கின்ற ஒருவர் உங்களுக்கு அமைச்சராக கிடைத்திருக்கிறார். நாள்தோறும் ஆன்மீகப் பெரியவர்கள் அறநிலையத் துறையையும், அமைச்சர் சேகர்பாபு அவர்களையும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**

★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் தொடர்ந்து 5 ஆண்டுகள் பணி புரிந்த 13 பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திருக்கோயிலில் பணி புரிந்து பணிக்காலத்தில் மறைவெய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 8 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணை வழங்கப்பட்டிருக்கிறது.

★ இதுவரை, திருக்கோயில்களில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1,298 பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 111 பணியாளர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், ஊக்கத்தொகை உயர்வு செய்தல், தினக்கூலி மற்றும் தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்த 1,298 பணியாளர்களுக்கு பணிநிரந்தரம் வழங்கப்பட்டது. ஓய்வூதியதாரர்களுக்கு தொகை உயர்வும் வழங்கப்பட்டிருக்கிறது இப்படி வரிசைப் படுத்திக் கொண்டே போகலாம்.

ஏதோ திடீர் என்று பழனியில் மாநாடு நடத்தவில்லை; இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் செய்து கொண்டுதான் பழனியில் இந்த மாநாட்டை இந்து சமய அறநிலையத் துறை நடத்துகிறது.

**அனைவரது நம்பிக்கைக்கும் நன்மை செய்து தரும் அரசு!**

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் இருக்கும். அதில் உயர்வு தாழ்வு இல்லை. அந்த நம்பிக்கைகளுக்கு திராவிட மாடல் அரசு எப்போதும் தடையாக இருந்தது இல்லை. அதுமட்டுமல்ல, அனைவரது மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறோம்.

**இன்று கோயில்கள் சீரோடும் சிறப்போடும் இயங்கிட அடித்தளம் அமைத்த சட்டம்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய் அமைப்பான நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் பழுத்த ஆத்திகரான அன்றைய முதலமைச்சர் பனகல் அரசரால் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பண்பாட்டுச் சின்னங்களான கோயில்கள் முறையாக பாதுகாக்கப்படவேண்டும், முறையாக செயல்படவேண்டும் என்ற நோக்கத்துடன் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று சீரோடும், சிறப்போடும் கோயில்கள் இயங்க அடித்தளம் அமைத்தது அந்தச் சட்டம்தான்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் –

★1,355 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள்.

★3 ஆயிரத்து 776 கோடி ரூபாயில் 8 ஆயிரத்து 436 திருக்கோயில்களில் திருப்பணிகள்.

★50 கோடி ரூபாயில் கிராமப்புற ஆதிதிராவிடர் கோயில்களில் திருப்பணிகள் நடத்தி இருக்கிறோம்.

★ 62 கோடியே 76 லட்சம் ரூபாயில் 27 திருக்கோயில்களில் இராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

★ 80 கோடியே 50 இலட்சம் ரூபாயில் பழனி – இடும்பன்மலை, திருநீர்மலை, திருக்கழுக்குன்றம் கோயில்களில் கம்பிவட ஊர்திகள் அமைக்கப்பட்டிருக்கிறது.

★ 5 ஆயிரத்து 577 கோடி ரூபாய் மதிப்புடைய 6 ஆயிரத்து 140 ஏக்கர் கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டிருக்கிறது.

★756 திருக்கோயில்களில் 'நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்' செயல்பாட்டில் இருக்கிறது. தினந்தோறும் 82 ஆயிரம் பேர் உணவு உண்டு வருகிறார்கள்.

★கோயில் சொத்துகளை அளவிடும் பணி நடைபெற்று வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 1 லட்சத்து 59 ஆயிரத்து 507 ஏக்கர் நிலங்கள் நவீன ரோவர் கருவிகள் மூலம் அளவீடு செய்யப்பட்டு; 64 ஆயிரத்து 522 கற்கள் நடப்பட்டுள்ளன.

★4 ஆயிரத்து 189 ஏக்கர் நிலம், மீண்டும் கோயில் பெயரில் பட்டா செய்யப்பட்டிருக்கிறது.

இப்போது நான் சொன்னதெல்லாம் மிகவும் குறைவு. நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகளை, இந்து சமய அறநிலையத்துறை மூலமாக ஒரு புத்தகமாகவே போடப்பட்டிருக்கிறது. அதில் இருந்து சில வற்றைதான் நான் இப்போது சொல்லியிருக்கேன். அந்தப் புத்தகத்தை நீங்கள் எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டும். நீங்கள் மட்டுமில்லை; ஊடகத்துறையைச் சேர்ந்த நண்பர்களும் இந்தச் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்நாட்டு ஆன்மீக வரலாற்றிலேயே மிகச் சிறப்பான இடம் பெறும் மாநாடு!**

அந்தச் சாதனைகளுக்கு மகுடம் வைத்தது போல, பழனியில் நடக்கின்ற இந்த அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு, இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு ஆன்மீக வரலாற்றிலேயே மிகச் சிறப்பான இடத்தைப் பெறும்!

★ நீதியரசர்கள்
★ மகா சன்னிதானங்கள்
★ ஆன்மீகப் பெரியவர்கள்
★ சமயச் சொற்பொழிவாளர்கள்
★ தமிழ் இலக்கிய அறிஞர்கள்
★ புலவர்கள்
★ பேராசிரியர்கள்
★ பேச்சாளர்கள்
★ இசைக் கலைஞர்கள்
★ நாட்டியக் கலைஞர்கள்
★ பாடகர்கள் – என்று பல்துறை அறிஞர்கள் பழனியில் சங்கமிக்கின்ற இந்த மாநாட்டுக்கு என்னுடைய வாழ்த்துகள்!

**அன்பால் உயிர்கள் ஒன்றாகும்! அறத்தால் உலகம் நன்றாகும்!**

ஆலய வழிபாடுகளில் தமிழ்மொழி முதன்மை பெற வேண்டும்! திருக்கோயில் கருவறைக்குள் மனிதருக்கிடையே பாகுபாடு காட்டாத சமத்துவம் நிலவவேண்டும்! அன்பால் உயிர்கள் ஒன்றாகும்! அறத்தால் உலகம் நன்றாகும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்கள்.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பேச்சு!... 2 ஆம் பக்கத் தொடர்ச்சி

சரியான முறையில் விமர்சனம் செய்திருந்தால், அதைத் தவறாமல் படிப்பாராம். அதில் ஏதாவது தவறு இருந்தால், அந்த விமர்சனம் செய்தவரை அழைத்து, இதனால்தான் இதை செய்தேன் என்று சொல்வாராம். இது ஒரு மிகப்பெரிய குணம்.

இப்பொழுதும் விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் செய்யவேண்டும்; செய்யுங்கள். ஆனால், யாருடைய மனதையும் நோகடிக்காதீர்கள்.

இப்பொழுதெல்லாம் யார் பிரஸ்ஸை சந்திக்கிறார்கள். யாரும் சந்திக்கமாட்டார்கள். அது அவ்வளவு எளிதல்ல.

ஆனால், கலைஞர் அவர்களுக்குப் பத்திரிகையாளர்கள் சந்திப்பு என்றால், யானைக்குக் கரும்பு சாப்பிடுவது போன்றதாகும். பத்திரிகையாளர்களைப் பார்த்தாலே, ஒரு புன்சிரிப்புடன் எதிர்கொள்வார்.

எதிர்க்கட்சி பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்கும்பொழுது, அந்தக் கேள்விக்குத் தெளிவாக, நக்கலாக பதில் சொல்லிவிட்டு போவார். இது யாருக்கும் சர்வ சாதாரணமாக வருகின்ற விஷயமல்ல.

எத்தனையோ பேச்சாளர்கள் இருக்கிறார்கள்; ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி இருக்கும். நல்ல பேச்சாளர்கள் எப்படி என்றால், இடை இடையே கேப் கொடுப்பார்கள். சில இடங்களில் அழுத்துவார்கள்; சில இடங்களில் ரோஷமாகப் பேசுவார்கள்; சில இடங்களில் மெதுவாகப் பேசுவார்கள்; சில இடங்களில் கர்ஜிப்பார்கள்.

**கலைஞரின் பேச்சுத் திறமை!**

ஆனால், கலைஞருடைய பேச்சை கேட்டீர்களேயானால், ஒரே சுரத்தில் இருக்கும். அதைக் கேட்பவர்களுக்குத் துள்ளல், சிரிப்பு, கோபம் வரும். கலைஞருடைய பேச்சுத் திறமை அதுதான்.

அவரைப் எப்பொழுது பார்த்தாலும், வாங்க, எப்படி இருக்கிறீங்க? சூட்டிங் எப்படி போகிறது? விசாரிப்பார்கள். முதலில் சூட்டிங்கைப்பற்றித்தான் விசாரிப்பார்; ஏனென்றால், அதுதானே அவருக்குத் தாய் வீடு.

எப்பொழுதும் மகிழ்ச்சியாகத்தான் நான் அவரைப் பார்த்திருக்கிறேன். இரண்டு முறை மட்டும் அவர் சோர்ந்து போய், மிக சோகமாக அவர் சொன்னது ஒன்று, முரசொலி மாறன் அவர்கள், அப்பலோ மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருக்கும்பொழுது மிகவும் சோகமாக இருந்தார்.

இரண்டாவது முறை, தலைமைச் செயலகத்தில், வீரப்பன், ராஜ்குமாரை கடத்திக் கொண்டு போனபோது, மிகவும் சோகமாக இருந்தார். இப்படிப் பண்ணிவிட்டானே, என்ன பண்ணுவது? என்று.

அந்த இரண்டு முறைதான் நான் அவரை சோகமாகப் பார்த்திருக்கிறேன்.

மற்றபடி அவர் சி.எம்.மாக இருந்தாலும் ஒன்றுதான், சி.எம். இல்லாமல் இருந்தாலும் ஒன்றுதான்.

அவர் சி.எம்.மாக இருந்தால், அவருடைய வீட்டின் முன்பு நிறைய போலீஸ் பாதுகாப்பு இருக்கும். ஆகா, இவர் இப்பொழுது சி.எம். இல்லையென்றால், எந்த வித்தியாசமும் தெரியாது.

**சிவாஜி திரைப்படம்!**

'சிவாஜி' திரைப்படத்தை நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள் முழு படத்திலும் அரசியல்வாதிகளை விமர்சனம் செய்து, அரசாங்கத்தை விமர்சனம் செய்து, லஞ்சத்தைப்பற்றி சொல்லி எடுத்த திரைப்படம் அது.

அந்தக் கதை தெரிந்திருந்தும், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது, அந்தத் திரைப்படத்தை வந்து பார்த்தார். அப்பொழுது வைரமுத்து அவர்களும் இருந்தார். அவர் சொன்னார், சார் உங்களுக்கு ரொம்ப தைரியம்; இது போன்று ஒரு படத்தை எடுத்துவிட்டு, சி.எம். பக்கத்திலே அமர்ந்து பார்க்கிறீர்களே? என்றார்.

படத்தைப் பார்த்துவிட்டு சி.எம். கலைஞர் அவர்கள் சொன்னார்கள், நமக்கும் இதையெல்லாம் ஒழிக்கவேண்டும்; நல்லது செய்யவேண்டும் என்று ஆசை என்று சொல்லி, ஒரு பெருமூச்சு விட்டார். அந்தப் பெருமூச்சில் பல ஆயிரம் விஷயங்கள் இருந்தது.

அதற்குப் பிறகு நான் வைரமுத்து அவர்களிடம் சொன்னேன் சி.எம். அவர்கள் பார்த்தது முக்கியமல்ல இந்தத் திரைப்படத்தின் வெற்றி விழாவில் நான் கலந்து கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார் என்றேன். அது தைரியம்!

**வலுவான ஆலமரம் தி.மு.க.!**

**❝கலைஞரின் உடன்பிறப்புகளான வலுவான ஆலமரம் திமுக. இதையாராலும் அசைக்க முடியாது. புயல்வந்தால் மரங்கள் சாய்ந்து விடும். ஆனால் தி.மு.க. என்ற ஆலமரம் ரொம்ப Strong. அதை எந்த புயல்களாலும் ஒன்றும் செய்யமுடியாது.❞**

அந்தத் திரைப்படத்தின் வெற்றி விழாவில் கலந்துகொண்டு, எல்லோரைப் பற்றியும் புகழ்ந்து பேசி, எல்லோருக்கும் கேடயம் கொடுத்து, சந்தோஷப்பட்டார்.

**கலைஞரின் அன்பு, பாசம்!**

ஒருமுறை எனக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்தேன். மூச்சுத் திணறலோடு நான் இருந்தபொழுது, மஞ்சள் துண்டு அணிந்து என் முன் வந்து நிற்கிறார். கிட்டே வந்து என் கைகளைப் பிடித்துக்கொண்டார்; அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் வெளியே வருகிறது.

நான் என்ன செய்தேன் அவருக்கு?

எவ்வளவு ஓர் அன்பு, பாசம் கொஞ்ச நாள் பழகிய எனக்கே அப்படி என்றால், கூடவே இருக்கும் உங்களுக்கு எப்படி இருக்கும்?

அவர் கண்களில் கண்ணீர் என்னுடைய கைகளை வருடினார். அவருடைய கை பூவை விட மென்மையானதாக இருந்தது.

என் வாழ்நாளில் அவர் விட்ட கண்ணீரை, அந்த ஸ்பரிசத்தை என்னால் மறக்கவே முடியாது.

அவர் போன்ற ஒரு மகானைப்பற்றி பேசினால், பேசிக்கொண்டே போகலாம்.

இதுபோன்ற ஓர் அருமையான புத்தகத்தை வெளியிட்டு, அந்தப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்கின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்த எ.வ.வேலு அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி. சி.எம். அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு, என்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

ஏதாவது தவறு இருந்தால், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பேசினார்.